# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி
# அசல் வழக்கு எண். 171/2015

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | கமலா | மதம் | .. | இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. | முத்து | தொழில் | .. | விவசாயம் |
| வயது | .. | 52 | ஜாதி | .. | நாடார் |
| கிராமம் | .. | அரசிராமணி | நாள் | .. | 26.02.2020 |
| வட்டம் | .. | சங்ககிரி | | | |

பி.சா.1 – கமலா - முதல் விசாரணையின் தொடர்ச்சி.

1) 1984 ஆம் ஆண்டிற்கு முன்பு எனது தந்தை பழனியப்பனுக்கு ஆதரவாக சங்ககிரி வட்டாட்சியரால் வழங்கப்பட்ட நில உடைமை குறிப்பேட்டு பட்டா, உண்மை நகல். பி.சா.ஆ.1.

2) 29.07.1985 – சர்வே எண்.737/8 இல் உள்ள பொது கிணற்றிற்கு உரிய பட்டா, உண்மை நகல். பி.சா.ஆ.2.

3) 29.07.1985 - எனது தகப்பனார், சகோதரி மற்றும் எனக்கு ஆதரவாக வழங்கப்பட்ட பட்டா, உண்மை நகல். பி.சா.ஆ.3.

4) எனது தாயார் 2 ஆம் பிரதிவாதி பெயரில் உள்ள கந்தாய ரசீதுகள், 14 எண்ணிக்கை, அசல். பி.சா.ஆ.4.

5) குள்ளம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் கடன் பெற்று செலுத்தியதற்கு உண்டான ரசீதுகள், 3 எண்ணிக்கை, அசல். பி.சா.ஆ.5.

6) 1 ஆம் பிரதிவாதியின் புகாரின் பேரில் 2, 3 பிரதிவாதிகள் மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை, குற்றவியல் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட நகல், (இந்த ஆவணத்தின் சான்றிட்ட நகலை பெற்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதாக கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் அளித்த உறுதிமொழியின் பேரிலும், இந்த ஆவணம் குற்றவியல் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட ஆவணம் என்பதாலும், குறுக்கு விசாரணையில் மேற்கண்ட குற்ற வழக்கு குறித்து வாதிகள் தரப்பு சாட்சிகள் ஒப்புக்கொண்டுள்ளதாலும் இந்த ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது.) பி.சா.ஆ.6.

வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம் / கமலா

ஒப்பம் / திருமதி.மு.பாக்கியம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.